INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

ஊடக அறிக்கை:

மந்தையைப் பாதுகாக்க ஓநாயை நியமிப்பது - இலங்கையில் குற்றம் புரிபவரைப் பாதுகாத்தல்.

யோகனிஸ்பேர்க் (13பெப்ரவரி2017): பாதிப்போரையும் சாட்சிகளையும்பாதுகாப்பதற்கான தேசிய பாதுகாப்பு அதிகாரசபை என அழைக்கப்படும் அமைப்பிற்கு ஐ.நா அறிக்கையில் குற்றம் புரிந்தவர் எனக் கருதப்படும் ஆக்க குறைந்து ஒருவர் ஆவது, பாதிப்புற்றோரையும சாட்சிகளையும் பாதுகாக்க எனக் கருதப்படும் அமைப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். இன்று வெளியிடப்பட்டுள்ள ITJPயின் புதிய கோப்புத்தொகுப்பிற்கமைய ஆக்க் குறைந்து இன்னும்வேறு இருவர் நியமிக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயம் ஆகும். இது மந்தையைப் பாதுகாக்க ஓநாயைப் நியமிப்பதற்கு ஒத்த்து போல் உள்ளது.

"தற்போதய அமைப்பு இருக்கையில் எந்த ஒருவரும் அரசுக்கோ பாதுகாப்புப் படையினருக்கோ எதிராக சாட்சியம் அளித்து தாம் பாதுகாக்கப்படுவர் என எதிர்பார்க்க முடியாது, மாறாக அவர்கள் சாட்சிய மளித்த பின் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என அரசிடம் கோரினால் அவர்களின் உயிர்களுக்கே அச்சுறுத்தல் ஏற்படக்கூடும். இந் நியமனங்கள் மூலம் தெரியவருவது யாதெனில் புதிய அரசாங்கம் குற்றம் புரிந்துள்ளவர்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டுள்ளதே" என்று ITJP யின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா கூறியள்ளார்.

ஜனாதிபதி சிறிசேனா அவர்களின் அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு அதிகாரசபைக்கு சர்ச்சைக்குரிய மற்றைய நியமனங்களில், சிவில் யுத்தம் முடிவடைந்து முன்னைநாள் போராளிகளுக்கு " புனர்வாழ்வு " அளிப்பதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரியை நியமித்து ஆகும். ஐ.நாவினால் நடத்தப்பட்ட புலனாய்வின்படி புனர்வாழ்வு முகாம்களில் சித்திரவதை நடைபெற்றது என்பதற்கான நியாயப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் உண்டு இது தொடர்பாக மேலும் புலனாய்வு செய்ய வேண்டும் என்று ஐ.நாவின் சித்திரவதைக்கு எதிரான குழு சிபார்சு செய்துள்ளது. ITJP யின் கோப்புத்தொகுதிகளில் "புனர்வாழ்வு" முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டு உயிர் தப்பிய 14 பேர்களுடைய சாட்சியங்கள் உள்ளன. அவர்களின் கூற்றுப்படி ஒட்டு மொத்தமாக குறித்த அதிகாரியின் பொறுப்பில் முகாம்கள் இருந்த காலத்தில் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். இவ் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்ட இன்னொரு அங்கத்தவர் பிரான்ஸ் அரச சார்பற்ற நிறுவனமாகிய *Action Contra La Faim* இல் பணிபுரிந்த உதவியாளர்களின் 17 பேரின் கொலை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் பாதுகாப்பு படையினருக்கு எதிராக சாட்சியம் அளிப்பதை தடுக்கும் வகையில் இவர் ஈடுபட்டார் என சர்வதேச சுயாதீன நிபுணர்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

"2015ம் ஆண்டு இலங்கை அரசாங்கம் கூட்டாக முன் வைத்த ஐ. நா தீர்மானத்தில் பதவிகளுக்கு நியமனங்கள் செய்யும் போது உத்தியோகஸ்தர்களினதும் நியமனங்கள் வடிகட்டியே செய்யப்படும் என்ற தெளிவான அர்ப்பணிப்புடனான கூற்றுக்கு முரணானதாகும்", என ஜஸ்மின் சூக்கா அம்மையார் கூறியுள்ளார்.

**மேலதிக தகவலுக்கு கோப்புத் தொகுப்பை இங்கு பார்க்கவும் : www.itjpsl.com**

அத்துடன் திரு சிசிர மெண்டிஸ் தொடர்பில் **itjpsl UNCAT** க்கு அனுப்பிய கொப்புத் தொகுப்பை இங்கே பார்க்கவும்: http://www.itjpsl.com/assets/press/Press-Release-Sisira-Mendis.pdf